057

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNU5341/ESU3141 – கல்வியியல் வழிகாட்டலும் ஆலோசனையும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 26.01.2025 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. கல்வி வழிகாட்டுதல் மற்றும் கல்வி ஆலோசனை ஆகியவற்றுக்கு இடையே உள்ள மூன்று (03) வேறுபாடுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
2. எண்ணங்கள், மனவெழுச்சிகள் மற்றும் நடத்தைகளுக்கு இடையிலான தொடர்பினைப் புரிந்துகொள்வதில் அல்பர்ட் எலிஸ் இன் பகுத்தறிவு வாத மனவெழுச்சி நடத்தை அணுகுமுறையில் (Albert Ellis's Rational Emotive Behavior Therapy) ABC மாதிரியைச் சுருக்கமாக விளக்குக.
3. பாதுகாப்பான, மரியாதைக்குரிய மற்றும் பயனுள்ள ஆலோசனை உறவை உறுதிப்படுத்த, ஆலோசகர்கள் பின்பற்ற வேண்டிய நான்கு (04) நல்லாசார நெறிகளைக் (ஒழுக்க நெறி) குறிப்பிடுக.
4. பண்டுராவின் சமூகக் கற்றற் கோட்பாடு (Bandura's Social Learning Theory) தொடர்பாக குழந்தைகளின் ஆளுமை விருத்திக்குப் பெற்றோரின் நடத்தையின் முக்கியத்தவத்தைச் சுருக்கமாக விளக்குக.
5. குழந்தைகளின் நடத்தைப் பிரச்சினைகளை பாதிக்கும் நான்கு (04) காரணிகளைப் பெயரிட்டு, பொருத்தமான உதாரணத்துடன் அவற்றைச் சுருக்கமாக விளக்குக.
6. பெற்றோருக்கு வழிகாட்டுதலை வழங்கும் போது ஆன் ரோவின் தொழில்சார் ஆலோசனைக் கோட்பாட்டின் (Anne Roe's Vocational Counseling Theory) முக்கியத்தவத்தை விளக்குக
7. வகுப்பறையில் அவதானிக்கக் கூடிய குழந்தைகளின் ஐந்து (05) நடத்தைப் பிரச்சினைகளைக் குறிப்பிடுக.
8. "குறைவான அடைவுடைய மீத்திறன் உடையோர் (Gifted Under achievement)" என்ற சொல்லை விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** எலி கின்ஸ்பர்க் (Eli Ginzberg) இனது தொழில் தேர்வுக் கோட்பாட்டின் படி மூன்று (03) தொழில்சார் தேர்வின் முக்கிய நிலைகளைக் குறிப்பிடுக.

**(03 புள்ளிகள்)**

**ii.** தொழில்சார் / தொழில் வழிகாட்டுதல் (Vocational / Career) மற்றும் ஆலோசனையின் முக்கிய ஐந்து (05) நோக்கங்களைப் பெயரிட்டு, அந்த நோக்கங்களைப் பற்றி ஒரு ஆசிரியர் அறிந்திருப்பதன் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** இயலாமையுடைய மாணவர்களுக்கு ஆசிரியராக நீங்கள் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் போது நீங்கள் கருத்தில் கொள்ளும் முக்கிய காரணிகளைப் பற்றி ஆராய்க.

**(10 புள்ளிகள்)**



67

**10. i.** பொருத்தமான உதாரணத்துடன் "பொருத்தப்பாடடைதல்" என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விவரிக்குக.

**(03 புள்ளிகள்)**

**ii.** சிறுவர்கள் மற்றும் கட்டிளம்பருவத்தினரின் ஆளுமை பொருத்தப்பாடடைதலைத் தடுக்கும் **மூன்று** (03) காரணிகளைக் குறிப்பிடுக. **இரண்டு** (02) உதாரணங்களுடன் ஒரு காரணியை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** விசேட தேவைகளைக் கொண்ட குழந்தைகளைத் திறம்படச் சீராக்கம் செய்ய உதவும் **மூன்று** (03) ஆக்கபூர்வமான வகுப்பறை உத்திகளைப் பரிந்துரைக்க, மேலும் உத்திகளில் **ஒன்றை** (01) வடிவமைப்பதற்கான படிப்படியான வழிகாட்டியை (step by step guide) வழங்குக.

**(10 புள்ளிகள்)**

**11.** "குறிப்பாக விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் நடத்தை மற்றும் நல்வாழ்வை வடிவமைப்பதில் பாடசாலையின் மனவெழுச்சி சார் சூழல் (Emotional Climate) முக்கிய பங்கு வகிக்கிறது"

**i.** விசேட தேவைகள் உள்ள குழந்தைகளிடையே நேர்மறையான நடத்தையை ஊக்குவிப்பதில் பாடசாலைகளில் மனவெழுச்சிகரமான சூழலின் பங்கைக் கோடிட்டுக் காட்டுக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இயலாமைகள் உள்ள குழந்தைகள் மத்தியில் சவாலான நடத்தைகளை நிர்வகிப்பதில் இலங்கையில் உள்ள ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) தடைகளைக் குறிப்பிட்டு. அவை வகுப்பறை நிர்வாகத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள ஒரு சவாலைத் தேர்தெடுத்து, சவாலைத் தணிக்க நீங்கள் வழங்கக்கூடிய பரிந்துரைகளை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

**(09 புள்ளிகள்)**

**12.** "கார்ள் றொஜர்ஸின் தனியாள் மைய அணுகுமுறையால் விசேட தேவைகள் உள்ள குழந்தைகளின் பல்வேறு மனவெழுச்சி வேறுபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும்".

**i.** இந்தக் கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? உங்கள் பதிலை நியாயப்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இயலாமையுடைய குழந்தைகளைப் பாடசாலையிலிருந்து வேலை செய்யும் உலகிற்கு மாற்றுவதற்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**iii.** இயலாமையுடைய மாணவர்கள் பாடசாலையிலிருந்து வேலை செய்யும் உலகிற்கு மாறும் போது அவர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களைக் குறிப்பிடுக, மேலும் ஒரு ஆசிரயராக அவற்றைச் சமாளிக்க உங்கள் பரிந்துரைகளை விளக்குக.

(உங்கள் பதிலில் குறைந்தது **இரண்டு** (02) பரிந்துரைகளாவது இருக்க வேண்டும்.)

**(09 புள்ளிகள்)**

**13.** "சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுடன் பாடசாலை வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகளின் தேவை வேகமாக வளர்ந்து வருகிறது".

**i.** பாடசாலை வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை சேவைகளில் மேம்படுத்தல்கள் பற்றிய அறிவின் முக்கியத்துவத்தை தொடர்புடைய **இரண்டு** (02) எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(03 புள்ளிகள்)**

ii. பாடசாலை வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை செயல்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களை விவரிக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. மேலே குறிப்பிட்டுள்ள சவால்களை சமாளிப்பதற்கான வழிகளைப் பரிந்துரைக்குக.

**(09 புள்ளிகள்)**

**14. i.** டிஜிட்டல் திரைகளுக்கு (Digital Screens) அடிமையான குழந்தைகளில் காணக்கூடிய **மூன்று** (03) நடத்தை சார் சவால்களைக் குறிப்பிடுக.

**(03 புள்ளிகள்)**

ii. குழந்தைகளின் உடல், மனவெழுச்சி, சமூக மற்றும் கல்வி விருத்தியை திரை அடிமையாதல் எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஒவ்வொரு வகைக்கும் எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விவரிக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. உங்கள் வகுப்பறையில் இயலாமைகள் உள்ள சில மாணவர்கள் திரைகளுக்கு அடிமையாகி இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். இந்தப்பழக்கத்திலிருந்து பெற்றோரையும் உள்ளடக்கிய **மூன்று** (03) உத்திகளைக் கொண்ட திட்டத்தை உருவாக்குக.

இந்த உத்திகளை நீங்கள் எவ்வாறு செயல்படுத்துவீர்கள் என்பதை விவரிக்குக.

(09 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -